# ஆலயமணி ஓசையை

ஆலயமணி ஓசையை நாம் கேட்டிடுவோம் வாரீர்
ஆனந்தமே பாலன் புகழ் பாடிடுவோம் வாரீர் (2)

யேசு வந்து பிறந்திருக்கும் இடத்தை அறிந்தாயா
யேசு வந்து நடமாடும் நாளை அறிந்தாயா (2)
அன்றாட வாழ்வினிலே…
அன்றாட வாழ்வினிலே ஆனந்தமே வாழ
அருகில் அமர்ந்திருக்கு அயலவனே யேசு (2)

ஆலயமணி ஓசையை நாம் கேட்டிடுவோம் வாரீர்
ஆனந்தமே பாலன் புகழ் பாடிடுவோம் வாரீர் (2)

வறுமையினால் வாடுவோரில் யேசுவைக் கண்டாயா
வருத்தத்தினால் வருந்துவோரில் யேசுவைக் கண்டாயா (2)
அல்லல் படுவோரில்…
அல்லல் படுவோரில் ஆபத்தில் இருப்போரில்
யேசு பிறந்திருக்கும் அழகை நீ கண்டாயா (2)

ஆலயமணி ஓசையை நாம் கேட்டிடுவோம் வாரீர்
ஆனந்தமே பாலன் புகழ் பாடிடுவோம் வாரீர் (2)
ஆனந்தமே பாலன் புகழ் பாடிடுவோம் வாரீர் (2)